# மாங்காடு நகராட்சி

## நகர்மன்ற சாதாரணக் கூட்டம்

2026ம் ஆண்டு ஜூலை 2026 மாதம் 9ம் தேதி வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு மாங்காடு நகராட்சி அலுவலக நகர்மன்ற கூட்ட அரங்கில் நடைபெற உள்ள நகர்மன்ற சாதாரணக்கூட்ட பொருள் நடவடிக்கை விவரம்.

**குறள்**- அகன்அமர்ந்து ஈதலின் நன்றே முகனமர்ந்து
இன்சொலன் ஆகப் பெறின்.

**விளக்கம்**- முகம் மலர்ந்து இன்சொல் உடையவனாக இருக்கப் பெற்றால், மனம் மகிழ்ந்து பொருள் கொடுக்கும் ஈகையைவிட நல்லதாகும்.

---***-----

**பொருள் எண்.1**

நகராட்சி ஆணையரின் ஏப்ரல் **2026**, மே **2026** மற்றும் ஜூன் 2026 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.
**அலுவலக குறிப்பு**– மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண்.2**

நகராட்சி அலுவலகத்திற்கு வரப்பெற்றுள்ள முக்கிய அரசு கடிதங்கள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
**அலுவலக குறிப்பு**– பதிவு செய்யலாம்.

**பொருள் எண்.3**

மாங்காடு நகராட்சி 3 ஆண்டு குத்தகை வரியில்லா இனங்களான இலகுரக வாகனங்கள் நுழைவுக்கட்டணம் வசூல் செய்யும் உரிமம் 17..07.2023 முதல் 16.07.2026 வரைக்கான மூன்றாண்டு காலம் முடிவடைய உள்ளதால், 17.07.2026 முதல் 16.07.2029 வரை இலகுரக வாகனங்கள் நுழைவு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் பெற மூன்றாண்டுக்கான பொது ஏலம் விடுவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு.

மன்றம் அனுமதிக்கலாம்

பொருள் எண்.4

மாங்காடு நகராட்சி குத்தகை காமாட்சி அம்மன் கோயில் அருகில் அமைந்துள்ள நவீன குளியலறை மற்றும் கட்டண கழிப்பிடம் 2026-2027 ஆம் ஆண்டிற்கான குத்தகை புதுப்பிக்க (Renewal) செய்ய மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு- மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் எண்.5

மாங்காடு நகராட்சியில் 01 முதல் 27 வார்டுகள் சொத்துவரி 5 எண்ணிக்கையிலான இயந்திரம் SDE SMARTEK DUAL SIM Voice Announcement system M/s. ஸ்ரீ திரௌபதி எண்டர்பிரைசஸ் என்பவருக்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டமைக்கு செலவினம் ரூ.5,54,505/னை பொதுநிதியிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு- மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.6**

மாங்காடு நகராட்சியில் 1 முதல் 27 வரை உள்ள வார்டுகளில் வறட்சி காலங்களில் குடிநீர் பற்றாக்குறையை போக்கி சீரான குடிநீர் தொடந்து பொது மக்களுக்கு வழங்க போதிய குடிநீர் சப்ளை செய்ய இயலாத நிலையில் சென்னை குடிநீர் வாரியத்தின் மூலம் சப்ளை செய்து அதற்குண்டான கட்டணத்தை செலுத்த மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.7**

இந்நகராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலைப்பணிகள், கால்வாய் பணிகள் கொள்முதல் செய்யப்படும் உபகரணங்கள் மற்றும் இதரப் பணிகளுக்கு சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரர் மற்றும் நிறுவனங்களுக்கு பில் பட்டியல் பிடித்தம் செய்யப்படும் வருமானவரி, ஜி.எஸ்டி.வரி போன்ற இனங்களுக்கு சம்மந்தப்பட்ட துறைக்கு செலுத்திய தொகைக்கான ரிட்டன்ஸ் பைலிங் செய்வதற்கான ஆடிட்டருக்கு வழங்க வேண்டிய தோராய செலவினம் ரூ.2.00 லட்சம் வழங்க மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள் எண்.8**

மாங்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நகராட்சி சார்பாக அல்லது உயர்நீதிமன்ற உத்திரவு மூலம் ஆக்கிரமிப்புகள் ஏதேனும் அகற்ற வேண்டி சூழ்நிலை ஏற்பட்டால் மேற்படி ஆக்கிரமிப்பு அகற்றும் பொருட்டு JCB கனரக வாகனம் வாடகை மூலம் அமர்த்திக்கொள்ள தோராய செலவினம் ரூ.1,00,000/- பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணிக்கு ரூ.1,00,000/- தோராய செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.9**

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளுக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை பணிகளுக்காக M/s. Blooming Recycles நிறுவனம் மூலம் 52 DBC பணியாளர்கள் ஒப்பந்த புள்ளி அடிப்படையில் வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. மேற்படி நிறுவனத்தின் பணி காலம் முடிவடைவதால் பொது

மக்களின் சுகாதார நலன் கருதியும் அவசர அவசியம் கருதியும் மேற்கண்ட நிறுவனத்திற்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் அதே விலை விகிதத்தில் புதிய ஒப்பந்தபுள்ளி கோரும் வரை M/s. Blooming Recycles நிறுவனத்திற்கு மே 2026 முதல் ஜுன் 2026 வரை இரண்டு மாதங்களுக்கு டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிக்கு பணி நீட்டிப்பு செய்ய நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டமைக்கு மன்றத்தின் அனுமதி கோரி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.10**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 27 வார்டுகளில் பொது சுகாதாரப் பிரிவின் வாயிலாக JCB இயந்திரம் கொண்டு குப்பைகளை அகற்ற 2025 -2026 ஆண்டிற்கு MSR எர்த்மூவர்ஸ் நிறுவனத்திற்கு ஒப்பந்தபுள்ளி அடிப்படையில் பணிகள் மேற்கொள்ள பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் செய்யப்பட்டு வருகிறுது.மேற்படி ஒப்பந்த காலம் மார்ச் உடன் முடிவடைவதால் 2026 -2027 ஆம் ஆண்டிற்கு புதிய ஒப்பந்த புள்ளி கோரி பணி உத்திரவு வழங்கப்படும் வரை MSR எர்த் மூவர்ஸ் நிறுவனத்திற்கு ஜீலை 2026 முதல் ஆகஸ்டு 2026 வரை கால நீட்டிப்பு செய்து பணிகள் மேற்கொள்ள அதற்கான தோராயன செலவினம் ரூ.6,00.000/- பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.11**

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 27 வார்டு வரை உள்ள பகுதிகளில் பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் 2026-2027 ஆம் ஆண்டிற்கு தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அனைத்து பொது கழிப்பிடங்கள் மற்றும் சமுதாய கழிப்பிடங்களை தூய்மைபடுத்த தேவையான உபகரணங்கள் கொள்முதல் செய்வது தொடர்பாக அதற்கான தோராயன செலவினம் ரூ.2,49,000/- பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் எண்.12

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளுக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை பணிகளுக்காக M/s. Blooming Recycles நிறுவனம் மூலம் 52 DBC பணியாளர்கள் ஒப்பந்த புள்ளி அடிப்படையில் வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.மேற்படி நிறுவனத்தின் பணி காலம் முடிவடைவதால் பொது மக்களின் சுகாதார நலன் கருதியும் அவசர அவசியம் கருதியும் மேற்கண்ட நிறுவனத்திற்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் அதே விலை விகிதத்தில் புதிய ஒப்பந்தபுள்ளி கோரும் வரை M/s. Blooming Recycles நிறுவனத்திற்கு ஜுலை 2026 முதல் ஆகஸ்டு 2026 வரை இரண்டு மாதங்களுக்கு டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிக்கு பணி நீட்டிப்பு செய்ய மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் எண்.13

மாங்காடு நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் 27 வார்டுகளில் டெங்கு காய்ச்சல் கொசு புழு ஒழிப்பு பணி நடைபெற்று வருகிறது 2026-2027 ஆம் ஆண்டிற்கு டெங்கு காய்ச்சலை கட்டுப்படுத்தவும் கொசு புழு ஒழிப்பு பணிக்கு போதிய உபகரணங்கள் தேவைப்படுவதால் அதற்குரிய உபகரணங்களான பாகிங் மற்றும் ஸ்ப்ரே மிஷின் ஆகியவற்றில் பயன்படுத்தபடும் சிலிண்டர் வாங்கி வழங்கிட அதற்கான தோராய செலவினம் ரூ.3,00,000/-பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் எண்.14

காஞ்சிபுரம் மாவட்டம் மாங்காடு நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் தூய்மை இந்தியா திட்டம் (SBM 2.O) செயல்பட்டு வருகிறது இத்திட்டத்தில் ஒரு பகுதியாக பொது மக்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி IEC நடத்தப்பட்டு வருவதாலும் குப்பைகளை தரம் பிரித்தல் உரம் தயாரித்தல் பிளாஸ்டிக் பயன்பாட்டை தவிர்த்தல் மேற்கண்ட நிகழ்ச்சிகளுக்கு FLEX BOARDS, BANNERS,HAND BILLS, MANURE BAGS, T-SHIRT,CAP மற்றும் அவ்வப்போது அறிவிக்கப்படும் அரசின் அறிவிப்பு மற்றும் திட்டத்தின் படி நிகழ்ச்சிகளுக்கு தேவைப்படும் பொருட்கள் வாங்கி வழங்கிட ஒப்பந்தபுள்ளி கோரவும், அதற்கான தோராய செலவினம் ரூ.5.00 லட்சத்தினை பொது நிதியில் வழங்கவும் மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் எண்.15

மாங்காடு நகராட்சியில் 27 வார்டு எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தெருக்களில் சுற்றித்திரியும் நாய்கள் மற்றும் வீடுகளில் வளர்க்கப்படும் நாய்கள் ஆகியன நாளுக்கு நாள் அதிகரித்து கொண்டே வருகிறது. மற்றும் பொதுமக்களிடம் இருந்தும் தொடர்ந்து புகார்கள் இவ்வலுவலகத்திற்கு வந்த வண்ணம் உள்ளது. எனவே தெருக்களில் சுற்றித்திரியும் நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை (ANIMAL BIRTH CONTROL) செய்து நாய்களின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்தவும் மற்றும் வெறிநாய் கடி தடுப்பூசி ( ANTI RABIES VACCINE ) செலுத்திடும் பணி மேற்கொள்வதும் அவசியமாகிறது.மற்றும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வண்ணம் FLEX BOARDS, BANNERS ஆகிய பணிகளுக்கு தேவையான உபகரணங்களை 2026-2027 ஆம் ஆண்டிற்கு வாங்க ஒப்பந்தபுள்ளி கோர மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் எண்.16

காஞ்சிபுரம் மாவட்டம் மாங்காடு நகராட்சி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998, (தமிழ்நாடு சட்டம் 9/1999) தமிழ்நாடு சட்டம் 30/2025ன் மூலம் மேற்கொள்ளப்பட்ட திருத்தம் பிரிவு 37(1) (1-a)ன்படி மாற்றுத்திறனாளி நபர்களிடமிருந்து மாங்காடு நகராட்சி மன்றத்திற்கு உறுப்பினர் நியமனம் செய்யும் அறிவிப்பினை மாநில அளவில் Trinity Mirror Chennai ஆங்கிலத்திலும், Trinity Murasu Chennai தமிழிலும் விளம்பரம் செய்தமைக்கு பட்டியல் தொகை ரூ.22831/- (Inclusive of GST) Adwave Advertising Private Limited என்ற விளம்பர நிறுவனத்திடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட தொகையினை பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- மேற்கண்ட செலவினம் ரூ.22831/- பொதுநிதியில் வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் எண்.17

மாங்காடு நகராட்சி முதல் நிலை நகராட்சியாக செயல்பட்டு வரும் சூழலில் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998-ன்படி சொத்துவரி விதிப்பு செய்து வசூலிக்கப்பட்டு வருகிறது. நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களது கடித ந.க.எண்.32658/ஆர்-1/2023ந் தேதிய கடிதத்தில் தமிழ்நாடு ஆரம்ப கல்விச் சட்டம் பிரிவு 34-இல் அரசின் முன் அனுமதியுடன் நகர்மன்றங்கள் சொத்துவரியுடன் கல்விவரி விதிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதன் விகிதத்தினை பிரிவு 35(1)இல் சொத்துகளின் ஆண்டு மதிப்பில் 5 விழுக்காட்டிற்கு மிகாமல் விதிப்பு செய்ய நகராட்சிகள் சட்டம் பிரிவு 80இல் நகரமன்றங்கள் கல்வி வரி விதிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளதை பின்பற்றி பிரிவு 91இல் சொத்துவரி ஆண்டு மதிப்பில் 5 விழுக்காட்டிற்கு மிகாமல் சொத்துவரியுடன் கூடுதலாக விதிப்பு செய்ய மன்ற தீர்மானம் செய்த பின்பு உரிய நடைமுறைகளை பின்பற்றி அதன் அறிவிப்பினை மாநில அளவில் தினத்தந்தி நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு பட்டியல் தொகை ரூ.37691/- (Inclusive of GST) Adwave Advertising Private Limited என்ற விளம்பர நிறுவனத்திடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட தொகையினை பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- மேற்கண்ட செலவினம் ரூ.37691/- பொதுநிதியில் வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் எண்.18

காஞ்சிபுரம் மாவட்டம் மாங்காடு நகராட்சியில் 2022-2023 ஆம் ஆண்டு பொதுநிதிப்பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாநில ஒப்பந்தப்புள்ளி செய்திமலர் மற்றும் மாநில அளவிலான ஒரு தமிழ் தினசரி நாளிதழ், ஒரு தென்னிந்திய அளவிலான ஆங்கில தினசரி நாளிதழில் கடந்த 19.05.2023 அன்று The Financial Express- southern Edition and Dinakaran நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு பட்டியல் தொகை ரூ.87938/- (Inclusive of GST) Moulis Advertising Service Pvt. Ltd என்ற நாளிதழில் விளம்பர நிறுவனத்திடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட தொகையினை பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- மேற்கண்ட விளம்பர கட்டண செலவினம் ரூ.87938/- பொதுநிதியில் வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் எண்.19

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் பாதாளசாக்கடை திட்டம் செயல்படுத்துதல் பணியில் Collection System அமைபதற்க்கு திட்ட மேலாண்மை ஆலோசகர்(PMC) நிர்ணயிக்கும் பணிக்கு மின்னனு முறையில் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்ததை தொடர்ந்து மாநில அளவில் தமிழ் மற்றும் ஆக்கிய நாழிதல்களில் விளம்பரம் செய்தமைக்கு M/s.Swastik Advertising நாளிதழ் நிறுவனத்திடமிருந்து பட்டியல் தொகை ரூ.59,378/- வழங்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

மேற்படி, நாளிதழ் நிறுவனத்திற்க்கு பட்டியல் தொகை ரூ.59,378/- பொதுநிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் எண்.20

இந்நகராட்சியில் ஆணையர் அவர்கள் அலுவலக பயன்பாட்டிற்காக பயன்படுத்தப்பட்டு வரும் ஈப்பு வாகனம் (வாகன எண். TN85U9200) மேற்படி வாகனத்தின் பேட்டரி பழுதடைந்து வாகனத்தினை இயக்க முடியாத நிலையுள்ளது. எனவே, அலுவலக பயன்பாட்டின் அவசியம் கருதி புதிய பேட்டரி மாற்றி பொருத்தப்பட்டமைக்கு பட்டியல் தொகை ரூ.8,500/- பேட்டரி நிறுவனமான M/s.Annamalayar Battery Works என்ற நிறுவனத்திற்கு வழங்கியது மன்றத்தின் பார்வைக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.21**

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.6 மற்றும் 9 ஆகிய பகுதிகளில் அங்கன்வாடி அமைக்க தனியரிடமிருந்து (Sponsor) தொகையினை பெற்று, மேற்படி பணியினை மேற்கொள்ள ம் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u> மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>பொருள் எண்.22</u>**

மாங்காடு நகராட்சியில் பின்வரும் குடிநீர் பணிகளை குடிநீர் நிதி அல்லது பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடுகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | வார்டு எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 24 | சார்லஸ் நகர் பகுதிகளில் ஆழ்துளை கிணறு அமைத்தல் | 6.00 |
| 2 | 14 | பத்மாவதி நகர் பகுதியில் ஆழ்துளை கிணறு அமைத்தல் | 2.50 |
| 3 | 9 | பாலாஜி அம்பாள் நகர் மற்றும் எம்.ஜி.ஆர் நகர் பகுதியில் ஆழ்துளை கிணறு அமைத்தல் | 5.00 |
| 4 | 6 | பத்மாவதி நகர் பகுதியில் ஆழ்துளை கிணறு அமைத்தல் | 2.50 |
| 5 | 6 | அடிசன் நகர் பூங்காவில் Iron Removal அமைத்து சுத்திகரிக்கபட்ட குடிநீர் இயந்திரம் பொறுத்தும் பணி | 4.50 |
| 6 | 9 | பாலாஜி அம்பாள் நகர் Ro Plantல் புதிதாக ஆழ்துளை கிணறு அமைத்து பராமரிப்பு மேற்கொள்ளும் பணி | 5.50 |

| | | | |
|---|---|---|---|
| 7 | 16 | அப்பாவு நகர் பகுதியில் அமைந்துள்ள அங்கன்வாடி மையத்தில் ஆழ்துளை கிணறு அமைத்தல் சின்டெக்ஸ் தொட்டி பொறுத்துல் | 2.00 |
| 8 | 14 | சீனிவாச நகரில் அமைந்துள்ள கைப்பம்பை அகற்றி மின் மோட்டார் பொறுத்தி குடிநீர் விநியோகம் செய்தல் | 1.50 |
| 9 | 6 | அடிசன் நகர் பகுதியில் ஆழ்துளை கிணறு அமைத்தல் | 2.50 |
| 10 | 7,8 | வார்டு எண்.7 மற்றும் 8 பகுதிகளில் ஆழ்துளை கிணறு அமைத்தல் | 5.00 |
| 11 | 1 | வார்டு எண்.1 பகுதிகளில் ஆழ்துளை கிணறு அமைத்தல் | 2.50 |

அலுவலக குறிப்பு- 1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.

2. மேற்படி பணிகளை குடிநீர் நிதி அல்லது பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் எண்.23

மாங்காடு நகராட்சியில் பின்வரும் அடிப்படை வசதி பணிகளை மேற்கொள்ளவும் அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடுகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | வார்டு எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 9 | அம்பாள் நகர் பாலாஜி அவென்யூ (நரிவனம் சாலை முதல் 3வது தெரு வரை) மேல் மூடியுடன் கூடிய மழைநீர் கால்வாய் அமைத்தல் | 32.00 |
| 2 | 9 | அம்பாள் நகர் பாலாஜி அவென்யூ மெயின் ரோடு பகுதியில் மேல் மூடியுடன் மழைநீர் கால்வாய் அமைத்தல் | 20.00 |
| 3 | 5 | காமாட்சி அம்மன் நகர் மெயின் ரோட்டில் மேல் மூடியுடன் கூடிய மழைநீர் கால்வாய் அமைத்தல் | 19.60 |
| 4 | 4,6,12,26 | வார்டு எண்.4,6,12,26 ல் உள்ள திறந்தவெளி மழைநீர் கால்வாய் மேல் மூடி அமைத்தல் | 13.80 |
| 5 | - | மாங்காடு நகராட்சி பகுதிகளில் தெருமின் விளக்குகளுக்கு 150W திறன் கொண்ட LED மின் விளக்குகள் சப்ளை செய்யும் பணி | 15.00 |
| 6 | 9,14 | வார்டு எண்.9 மற்றும் 14 பகுதியில் ஆழ்துளை கிணறு அமைத்தல் பணி | 5.00 |
| 7 | 26,27 | வார்டு எண்.26 மற்றும் 27ல் ஆழ்துளை கிணறு அமைத்தல் பணி | 7.50 |
| 8 | 17,18,19,20 | வார்டு எண்.17,18,19 மற்றும் 20 ஆகிய பகுதிகளில் ஆழ்துளை கிணறு அமைத்தல் பணி | 7.50 |
| 9 | 10, 26 | சக்ரா நகர், பட்டூர் மேல் நிலை நீர்தேக்கத் தொட்டிகளில் உள்ள குடிநீர் விநியோகத்திற்கு பயன்படுத்தும் வால்வுகள் பழுது பார்ப்பு பணி மற்றும் இதரப் பணிகள் | 6.50 |
| 10 | 14 | ஸ்ரீனிவாசா நகர் பகுதியில் உள்ள பழைய ஆழ்துளை கிணறு பழுது பார்த்தல் பணி | 1.50 |
| 11 | 2 | சமயபுரம் மயான பகுதியில் சின்டெக்ஸ் டேங்க் அமைத்தல் | 1.00 |
| 12 | 24 | தென்காலனி அண்ணாதெரு சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் | 12.80 |
| 13 | 2 | அசோக் அவென்யூ பூங்காவில் போர்வெல் அமைத்தல் | 2.00 |
| 14 | 1 | திருவள்ளுர் சிட்டி பேஸ்.-1 உள்ள பூங்காவில் காவலர் அறை, நடைபாதை , விளையாட்டு உபகரணங்கள், மின் ஒளி விளக்குகள் அமைத்தல் | 30.00 |

| | | | |
|---|---|---|---|
| 15 | 1 | திருவள்ளூர் சிட்டி பேஸ்.-3 உள்ள சுற்றுச்சுவர் மற்றும் நடைபாதை அமைத்தல் | 20.00 |
| 16 | 1 | காளியம்மன் நகர் மற்றும் கிருஷ்ணாநகர் பகுதியில் சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைத்தல் | 12.40 |
| 17 | 2 | அசோக் அவென்யூ பூங்காவில் நடைபாதை , விளையாட்டு உபகரணங்கள், மின் ஒளி விளக்குகள் அமைத்தல் | 30.00 |
| 18 | 17 | இராமகிருஷ்ணாபுரம் குளத்தில் சுற்றுசுவர் மற்றும் நடைபாதை அமைத்தல் | 30.00 |
| 19 | 2 | கீழ்ரகுநாதபுரம் அரசு ஆரம்ப பள்ளியில் பேவர் பிளாக் மற்றும் மேம்பாட்டு பணி மேற்கொள்ளுதல் | 12.00 |
| 20 | 3 | வடக்கு இரகுநாதபுரம் இரண்டாவது தெரு மற்றும் சக்தி நகர் மெயின்ரோடு மழைநீர் கால்வாயை உயர்த்தி மூடு பலகை அமைத்தல் | 17.60 |
| 21 | 3 | சக்தி நகர் பூங்காவில் தடுப்பு சுவர் மற்றும் இதரப்பணிகள் மேற்கொள்ளுதல் | 3.50 |
| 22 | - | பள்ளிகூட தெரு, தோப்புதெரு, கீழ் தெரு, கீழ்இரகுநாதபுரம், மேல் இரகுநாதபுரம், அப்பாவு நகர் மற்றும் ஒத்தவாடை தெரு கழிப்பிடங்கள் பராமத்து பணி மேற்கொள்ளுதல் | 13.60 |
| 23 | 6 | இந்நகராட்சி நூலக கட்டிடம் அமைந்துள்ள கட்டிடத்தில் மேல் தளம் மற்றும் மேம்பாட்டு பணி மேற்கொள்ளுதல் | 20.00 |
| 24 | 6 | பத்மாவதிநகரில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் | 14.00 |
| 25 | - | தோப்புத் தெரு, பள்ளிக்கூடத் தெரு, கீழ் தெரு, கீழ் ரகுநாதபுரம் மேல்ரகுநாதபுரம் மற்றும் அப்பாவு நகர் ஆகிய கழிப்பிடங்களில் ஆறு மாத காலத்திற்கு தூய்மை மற்றும் பராமரிப்பு பணிகள் செய்ய வெளிக்கொணர்வு முறையில் பணியாளர்கள் அமர்த்துதல் பணி | 13.60 |
| 26 | - | திருவள்ளுவர் சிட்டி பேஸ்-2, ஏ.ஆர்.நகர், அடிசன் நகர் செல்வகணபதி நகர், மாருதி என்கிளேவ், சிவானந்தா நகர், மீனாட்சி நகர் ஆகிய பூங்காக்களில் பராமரிப்பு பணிகள் செய்ய வெளிக்கொணர்வு முறையில் பணியாளர்கள் அமர்த்துதல் பணி | 17.60 |
| 27 | 21 | வார்டு எண்.21ல் உள்ள உடற்பயிற்சி வளாகத்திக்கு சுற்றுசுவர் மற்றும் பேவர் பிளாக் தளம் அமைத்தல் | 15.20 |
| 28 | 9 | வெள்ளீஸ்வரன் நகர் பகுதிளில் உள்ள பழுதடைந்த மழைநீர் கால்வாயினை சீரமைத்தல் | 17.60 |
| 29 | 1 முதல் 15 | மாங்காடு நகராட்சி வார்டு எண்.1 முதல் 15 வரை உள்ள பூங்காக்கள், குளம் மற்றும் சாலை ஓரங்களில் மரக்கன்றுகள் மற்றும் பாதுகாப்பு வளையங்கள் அமைத்தல் பணி | 10.00 |
| 30 | 16 முதல் 27 | மாங்காடு நகராட்சி வார்டு எண்.1 முதல் 15 வரை உள்ள பூங்காக்கள், குளம் மற்றும் சாலை ஓரங்களில் மரக்கன்றுகள் மற்றும் பாதுகாப்பு வளையங்கள் அமைத்தல் பணி | 10.00 |
| 31 | | நகராட்சி பகுதியில் உள்ள தெருமின் விளக்குகள் பழுதுபார்த்தல் பணி | 8.50 |
| 32 | | நகராட்சி எல்லைக்குட்பட்ட (Centre Median) பகுதியில் (8மீட்டர்) மின் விளக்குகள் அமைத்தல் | 10.00 |
| 33 | 10 | சக்ரா நகர் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி மற்றும் அதன் வளாகத்தில் பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் | 17.20 |
| 34 | 18 | ஹரி அவென்யூ மேல்நிலை நீர் தேக்கத் தொட்டியினை பழுதுபார்த்தல் | 5.00 |
| 35 | 4 | மீரா நகர் மெயின் தெருவில் உள்ள மழைநீர் கால்வாய் சீரமைத்தல் | 11.20 |

| | | | |
|---|---|---|---|
| 36 | 7 | வசந்தபுரம் பகுதியில் பல்நோக்கு கட்டிடத்தில் கதவுகள், ஜன்னல்கள் மின் உபகரணங்கள் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ளுதல் | 9.20 |
| 37 | 15 | ரகுநாதபுரம் பகுதியில் காரிய மேடை விஸ்தரிப்பு பணி | 7.00 |
| 38 | 18 | ஸ்ரீனிவாசா நகர் மற்றும் மேல்மாநகர் பகுதியில் உயர் மின் கோபுர விளக்குள் அமைத்தல் | 6.00 |
| 39 | 27 | பாத்திமா நகர் பகுதியில் (காயிதே மில்லத் நகர் முதல் மணப்பாத்தான் கால்வாய் வரை) மழைநீர் கால்வாய் மூடு பலகை அமைத்தல் | 12.00 |
| 40 | 1 முதல் 27 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் பொது மக்கள் பாதுகாப்பு நலன் கருதி ஆங்காங்கே பொறுத்தப்பட்ட சிசிடிவி கேமராக்கள் பழுதுநீக்கம் செய்து பராமரிப்பு பணி செய்தல் | 12.00 |
| 41 | 24 | சார்லஸ் நகர் பகுதியில் ஆழ்துளை கிணறு அமைத்தல் (2 நெ) | 6.00 |
| 42 | 11 | மாங்காடு நகராட்சி அலுவலக கட்டிடம் ஆண்டு பராமரிப்பு பணி செய்தல் | 3.00 |
| 43 | - | வார்டு எண்.1 முதல் 14 வரை உள்ள கால்வாயில் தூர் வாரும் பணி செய்தல் | 14.60 |
| 44 | - | வார்டு எண்.15 முதல் 27 வரை உள்ள கால்வாயில் தூர் வாரும் பணி செய்தல் | 12.50 |
| 45 | 14 | ஈ.வி.பி.ஸ்ரீராம் நகர் பூங்காவில் விளையாட்டு உபகரணங்கள் மின் விளக்குகள், பெயர் பலகைகள் மற்றும் இருக்கைகள் அமைத்தல் | 9.50 |
| 46 | 11 | ஓம் சக்தி நகர் 3வது தெருவில் பேவர் பிளாக் சாலை மாற்றியமைத்தல் மற்றும் மூடு பலகை அமைத்தல் | 12.00 |
| 47 | 11 | புதிய அலுவலகத்திற்கு இன்டர்நெட் வசதி ஏற்படுத்துதல் | 3.00 |
| 48 | 11 | நகராட்சி அலுவலக கணினிகள் மற்றும் பிரிண்டர்கள் ஆண்டு பராமரிப்பு பணிகள் செய்தல் | 3.50 |
| 49 | 27 | லீலாவதி நகர் பகுதியில் மழைநீர் கால்வாய் அமைத்தல | 19.50 |
| 50 | 26 | காயிதேமில்லத் நகர் பகுதியில் மழைநீர் கால்வாய் மேல்மூடி அமைத்தல் | 8.40 |
| 51 | 5 | பத்ரிமேடு சாந்தி நகர் பகுதியில் மழைநீர் கால்வாய் அமைத்தல் | 15.60 |
| 52 | 7 | ஸ்ரீனிவாசா நகர் ஸ்டெப் ஸ்டோன் பார்ம்-ல் தார்சாலை அமைத்தல் | 27.60 |
| 53 | 23 | கே.கே.நகர் 1வது மெயின் ரோடு பகுதியில் தார்தளம் அமைத்தல் | 11.60 |
| 54 | 13 | சாதிக் நகர் 1,2வது குறுக்கு தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 7.20 |
| 55 | 13 | சாதிக் நகர் மெயின் தெருவில் மழைநீர் கால்வாய் மேல்மூடி அமைத்தல் | 8.10 |
| 56 | 13 | சாதிக் நகர் 5வது குறுக்கு தெருவில் பேவர் பிளாக் சாலை உயர்த்துதல் | 5.10 |
| 57 | 13 | சாதிக் நகர் பகுதியில் மின் டவர் அமைத்துள்ள இடத்தில் சுற்று சுவர் அமைத்தல் | 4.50 |
| 58 | 26 | பட்டூர் ஆரம்ப பள்ளியில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் | 14.00 |
| 59 | - | வார்டு எண்.1 முதல் 14 வரை உள்ள மழைநீர் கால்வாயின் Manhole சீரமைத்தல் | 7.10 |
| 60 | - | வார்டு எண்.15 முதல் 27 வரை உள்ள மழைநீர் கால்வாயின் Manhole சீரமைத்தல் | 6.50 |
| 61 | 17 | மாரியம்மன் கோயில் தெரு, இராமகிருஷ்ணபுரம் பகுதியில் சின்டெக்ஸ் டேங்க் அமைத்தல் | 1.20 |

| | | | |
|---|---|---|---|
| 62 | 17 | மாரியம்மன் கோயில் தெரு விரிவு 1 மற்றும் 2வது தெருவில் கப்பி சாலை அமைத்தல் | 17.60 |
| 63 | - | இராமகிருஷ்ணபுரம் பகுதியில் அமைந்துள்ள MCC-1, MCC-2 மற்றும் RRC வளாகத்தில் வளம் மீட்பு பூங்காவினை ஆண்டு பராமரிப்பு செய்தல் | 5.00 |
| 64 | 6 | அடிசன் நகர் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி வளாகத்தில் பம்ப் ரூம் கட்டுதல் | 6.10 |
| 65 | 25 | பட்டூர் மெயின் ரோடு பகுதியில் உயர் மின் கோபுர விளக்குள் அமைத்தல் | 6.00 |
| 66 | 5 | பத்திரிமேடு நியாயவிலைக்கடை அமைந்துள்ள இடத்தில் ஆழ்துளை கிணறு மற்றும் இதர பணிகள் மேற்கொள்ளுதல் | 6.10 |
| 67 | 6 | | |

அலுவலக குறிப்பு- 1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்படி பணிகளை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் எண்.24

மாங்காடு நகராட்சியில் மறுசுழற்சி செய்ய இயலாத கழிவுகளை அகற்றும் பணி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மக்கும் குப்பைகள் மக்காத குப்பைகள் என தரம் பிரித்து கையாளப்படுகிறது. இதில் 8 டன் அளவிற்கு மறு சுழற்சி செய்ய இயலாத திடக்கழிவுகள் MCC-1 மற்றும் MCC-2 ல் சேர்த்து வைக்கப்படுகிறது. இதன்படி தினசரி 8 டன் அளவிற்கு, சுமார் 720 டன் குப்பைகள் MCC-1 மற்றும் MCC-2 ல் சேகரித்து வைக்கப்பட்டுள்ளது. இதனை அகற்றி அனகாபுத்தூர் மெயின்ரோடு பகுதியில் உள்ள ஸ்ரீ பாலாஜி கிரீன் எனர்ஜி என்ற நிறுவனத்திற்கு கொண்டு செல்ல ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு இந்நகர்மன்ற தீர்மான எண்.896 நாள்.28.11.2025 ன்படி திருவாளர் எம்.எஸ்.ஆர்.எர்த் மூவர்ஸ் நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. மேற்கண்ட ஒப்பந்ததாரரின் ஒப்பந்த காலம் முடிவடைந்த நிலையில் அவசர அவசியம் கருதி ஜீன் மற்றும் ஜீலை 2026 ஆகிய இரண்டு மாதங்களுக்கு திருவாளர் எம்.எஸ்.ஆர்.எர்த் மூவர்ஸ் நிறுவனத்திற்கு பணி நீடிப்பு செய்ய நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டமைக்கு மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் எண்.25

மாங்காடு நகராட்சி பொது சுகாதார பிரிவு மாங்காடு நகராட்சியில் பொது சுகாதார பிரிவு சார்பாக பொது மக்களுக்கு குப்பைகளை கையாள்வது தொடர்பாக பொது இடங்களில் தூய்மையாக வைத்திருத்தல் தொடர்பாக விழிப்புணர்வு வாசகங்கள் மற்றும் விழிப்புணர்வு ஓவியங்கள் ஆகியவற்றை வரைபட கலைஞர்கள் மூலம் வரைய 2026-2027 வரை ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.49 இலட்சத்தினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் எண்.26

மாங்காடு நகராட்சியில் 27 வார்டு எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தெருக்களில் சுற்றித்திரியும் நாய்கள் மற்றும் வீடுகளில் வளர்க்கப்படும் நாய்கள் ஆகியன நாளுக்கு நாள் அதிகரித்து கொண்டே வருகிறது. மற்றும் பொதுமக்களிடம் இருந்தும் தொடர்ந்து புகார்கள் இவ்வலுவலகத்திற்கு வந்த வண்ணம் உள்ளது. எனவே தெருக்களில் சுற்றித்திரியும் நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை (ANIMAL BIRTH CONTROL) செய்து நாய்களின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்தவும் மற்றும் வெறிநாய் கடி தடுப்பூசி ( ANTI RABIES VACCINE ) செலுத்திடும் பணி மேற்கொள்வதும் அவசியமாகிறது. நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண்:20383/2022/எச்1/நாள்:07/09/2023 மற்றும் கால்நடை வளர்ப்பு பால், மீன்வளம் மற்றும் மீனவர் (AH3) துறை (4D) எண்:1/நாள்:17/03/2023 ஆகியவற்றில் தெரிவித்துள்ளபடி ANTI RABIES VACCINE செலுத்திடவும் ARV போடுவதற்கு ஏற்கனவே மன்றத்தின் அனுமதி பெற்று தீர்மான எண்.1028/12.01.2026 அடிப்டையில் கடந்த 29/06/2026 மற்றும் 30/06/2026 ஆகிய இரண்டு நாட்கள் அவசர அவசியம் கருதி மேற்கண்ட பணிகள் மேற்கொள்ளபட்டு அதற்கான தொகை ரூ.78,600 ஐ Animal Trust Of India என்ற நிறவனத்திற்கு தொகை வழங்க மன்றத்தின் பார்வைக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் எண்.27

மாங்காடு நகராட்சியில் 27 வார்டு எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தெருக்களில் சுற்றித்திரியும் நாய்கள் மற்றும் வீடுகளில் வளர்க்கப்படும் நாய்கள் ஆகியன நாளுக்கு நாள் அதிகரித்து கொண்டே வருகிறது. மற்றும் பொதுமக்களிடம் இருந்தும் தொடர்ந்து புகார்கள் இவ்வலுவலகத்திற்கு வந்த வண்ணம் உள்ளது. எனவே தெருக்களில் சுற்றித்திரியும் நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை (ANIMAL BIRTH CONTROL) செய்து நாய்களின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்தவும் மற்றும் வெறிநாய் கடி தடுப்பூசி ( ANTI RABIES VACCINE ) செலுத்திடும் பணி மேற்கொள்வதும் அவசியமாகிறது. நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண்:20383/2022/எச்1/நாள்:07/09/2023 மற்றும் கால்நடை வளர்ப்பு பால், மீன்வளம் மற்றும் மீனவர் (AH3) துறை (4D) எண்:1/நாள்:17/03/2023 ஆகியவற்றில் தெரிவித்துள்ளபடி ANTI RABIES VACCINE செலுத்திடவும் ARV போடுவதற்கு பயன்படுத்தப்படும் உபகரணங்களை 2025-2026 ஆம் ஆண்டிற்கு வாங்கிட ஏற்கனவே மன்றத்தில் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.தீர்மானம் எண்.1028/12.01.2026 எனவே மேற்படி பணிக்கு ரூ.4,20,000 மின்னணு முறையில் புதிய ஒப்பந்த புள்ளி கோர மன்றத்திற்கு பொருள் வைக்கபடுகிறது.

அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் எண்.28

மாங்காடு நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் 27 வார்டுகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் தொடர்பாக வீடு வீடாக சென்று குப்பைகளை சேகரித்து தரம் பிரித்து (பச்சை,நீலம்,சிவப்பு,கருப்பு) என 4 வகையான நிறங்களில் பின்களை (பின்னின் கொள்ளளவு 45லி) BOV மற்றும் LCV, Pushcart என அனைத்து வாகனங்களுக்கும் தலா 4 என்ற விகித்த்தில் மொத்தம் 24 வாகனங்களுக்கு தேவைபடும் பின்களை வாங்கி வழங்கிட அதற்கான தோராய செலவினம் ரூ.3,50,000 ஐ -பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மேற்படி பணிக்கு மிண்ணனு முறையில் (E-Tender) புதிய ஒப்பந்தபுள்ளி கோர மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

பொருள் எண்.29

மாங்காடு நகராட்சியில் மறுசுழற்சி செய்ய இயலாத கழிவுகளை அகற்றும் பணி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மக்கும் குப்பைகள் மக்காத குப்பைகள் என தரம் பிரித்து கையாளப்படுகிறது. இதில் 8 டன் அளவிற்கு மறு சுழற்சி செய்ய இயலாத திடக்கழிவுகள் MCC-1 மற்றும் MCC-2 ல் சேர்த்து வைக்கப்படுகிறது. இதன்படி தினசரி 8 டன் அளவிற்கு, சுமார் 720 டன் குப்பைகள் MCC-1 மற்றும் MCC-2 ல் சேகரித்து வைக்கப்பட்டுள்ளது. இதனை அகற்றி அனகாபுத்தூர் மெயின்ரோடு பகுதியில் உள்ள ஸ்ரீ பாலாஜி கிரீன் எனர்ஜி என்ற நிறுவனத்திற்கு கொண்டு செல்ல ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு இந்நகர்மன்ற தீர்மான எண்.896 நாள்.28.11.2025ன்படி திருவாளர் எம்.எஸ்.ஆர்.எர்த் மூவர்ஸ் நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. மேற்கண்ட ஒப்பந்ததாரரின் ஒப்பந்த காலம் முடிவடைந்த நிலையில் அவசர அவசியம் கருதி ஆகஸ்ட் 2026 மற்றும் செப்டம்பர் 2026 ஆகிய இரண்டு மாதங்களுக்கு மேற்படி பணியினை திருவாளர் எம்.எஸ்.ஆர்.எர்த் மூவர்ஸ் நிறுவனம் மூலம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதி வழங்கலாம்.

நகரமன்ற தலைவர்
மாங்காடு நகராட்சி